Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடிஅரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 23-3-1946 பங்குனீ 10உ { மலர் 24

## ஏன் இந்த தயக்கம்?

அமைப்பு வேண்டுமென்று கோரினோம். தமிழ்நாட்டிலே சென்ற ஆண்டிலேயே முந்நூறுக்கு மேற்பட்ட கழகங்கள் அமைந்து, முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்தினர்களைச் சேர்த்தோம். இந்த ஆண்டில் கழகங்களின் எண்ணிக்கையை இருமடங்காக்கவும், ஒரு இலட்சம் உறுப்பினர்களைச் சேர்க்கவும் முடிவு செய்தோம். முறையாக ஜில்லா கழகங்களை அமைக்க வேண்டுமெனவும் உறுதி கொண்டோம்.

அங்கத்தினர்களைச் சேர்ப்பதில் சேலத்திற்குப்பின் இருந்த ஆர்வம் தோழர்களிடை இப்பொழுது காணமுடியவில்லை. திருச்சியில் காட்டிய துடிப்பு தொடர்ந்து கழக வேலைகளிற் காட்டப்படவில்லை. அங்கத்தினர்கள் எண்ணிக்கையை யதிகமாக்கவேண்டும் என்ற ஆர்வம் இருப்பினும் அதற்கான வேலை செய்யத் தோழர்கள் தயங்குகிறார்கள்.

காங்கரஸ் மந்திரிசபை அடுத்தமாதத்திற்குள் அமைக்கப்பட்டுவிடும். இங்கிலாந்து தூதுகோஷ்டியும் வந்துகொண்டிருக்கிறது. காங்கரசுகாரர்கள் பராக்கு கூறி வரவேற்கிறார்கள். சுயராஜ்ஜியம் கைக்கு வந்துவிட்டதுபோல் காங்கரஸ் ஏடுகள் எழுதுகின்றன. அரசாங்கமும் காங்கரசை ஆதரிப்பதுபோலவே காட்டிக்கொள்கிறது.

திராவிடநாட்டின் எதிர்காலம் மிக்க நெருக்கடியானதாக இருக்கும். திராவிட சமுதாயம் மானத்தோடு வாழ்வதா அன்றி மானமிழந்து திக்கற்ற கூட்டமாவதா என்பதை முடிவுகட்டவேண்டி வரும். சுருங்கச் சொல்லின் நாம் இருப்பதா அன்றி இறப்பதா என்ற நிலை ஏற்படும்.

நகரங்களில் இளைஞர்களும் மாணவர்களும், தோழர்களும் காட்டும் துடிப்பும, ஆர்வமும் ஆக்கவேலையில் உடனடியாகக் காட்டப்படவேண்டும்,

இதுவரை சேர்ந்துள்ள அங்கத்தினர்கள் எண்ணிக்கை பிறிதோரிடத்தில் தரப்பட்டுள்ளது. பல மாவட்டங்கள் இன்னும் ஐந்தில் ஒரு பங்குகூடச் சேர்க்கவில்லை என்பது கண்கூடு. ஏன் இந்த தயக்கம்? விரைவில் சேர்த்துதவுங்கள். அடுத்த வாரத்திற்குள் எவ்வளவு அதிகப்படுத்தப்போகிறீர்கள்?

செயலாளர், திராவிடர் கழகம்,
தலைமை நிலையம் ஈரோடு.

## மானங்காக்க வாரீர் மாணவத் தோழர்களே!

கோடை விடுமுறை நெருங்கிவிட்டது. மாணவத்தோழர்களை பிரசாரத்திற்கு அனுப்பும்படி பல இடங்களிலிருந்து கடிதங்கள் வந்தவண்ணம் உள்ளன.

மாணவர்கள் பொறுப்பான முறையில் பிரச்சாரம் செய்யும்பொருட்டு பயிற்சிக்கூடம், திருச்சி அல்லது ஈரோட்டில் விரைவில் ஏற்படுத்தி, நாலைந்து நாட்களுக்கு பெரியார், அண்ணாதுரை, தோழர்கள் வேதாசலம் மற்றும் பல அறிஞர்களைக்கொண்டு அறிவுரைகள் நிகழ்த்திப் பல மாவட்டங்களுக்கும் மாணவத் தோழர்களைப் பிரித்து அனுப்ப ஏற்பாடாகிறது.

பிரசாரத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் கீழ்கண்ட விவரங்களை 30-3-46க்குள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

பயிற்சிக்கூடத்தில் உணவு ஏற்பாடு முதலியன செய்யவேண்டியிருப்பதால் வரக்கூடிய மாணவர்கள் எண்ணிக்கை உடனே தெரியவேண்டியிருக்கிறது.

1. பெயர்:
2. தற்பொழுது பயிலும் பள்ளி அல்லது கல்லூரியும், வகுப்பும்.
3. பழைய மாணவராயின் தற்பொழுது செய்யும் வேலை.
4. பிரசாரம் செய்வதில் தங்களுக்குள்ள தகுதி, அனுபவம்.
5. எந்தத் தேதியிலிருந்து வரக்கூடும்?
6. பிரச்சாரத்தில் எத்தனை நாள் கலந்துகொள்ள முடியும்?
7. தற்போதைய முகவரி.
8. ஓய்வு கிடைத்ததும் தங்கும் முகவரி.

ஏப்ரல் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் பயிற்சிக்கூடம் ஆரம்பமாகும். இதுவரை சுமார் 60 மாணவர்களுக்கு மேல் பிரசாரத்தில் கலந்துகொள்வதாகத் தெரிவித்துள்ளனர். இன்னும் சில முக்கியமாணவர்கள் தமது விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை. பயிற்சிகூடம் ஆரம்பமாகும் தேதி முடிவானவுடன் அழைப்பு அனுப்பப்படும். தோழர்கள் பொறுத்தருள்க! இதுவரை விண்ணப்பித்துக் கொள்ளாத தோழர்கள் விரைவில் எழுத வேண்டுகிறோம்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக்கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

## ஒத்துழைக்க வாரீர்!

வரும் கோடை விடுமுறையில் மாணவர் கூட்டம் பிரசாரத்திற்குக் கிளம்புகிறது. அதில் கலந்துகொள்ள விரும்பும் சொற்பொழிவாளர்களும், புலவர்களும் தங்கள் பெயர்களை ஈரோடு திராவிட மாணவர் பிரசாரக் கழக செயலாளருக்கு அறிவிக்கவேண்டுகிறோம்.

## பாரதிதாசன் திருநாள்

24-2-46ல் தில்லை இளங்கோ மன்றத்தின் சார்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் திருநாள் கொண்டாடப்பட்டது. காலை 9மணிக்கு மாணவர்களின் ஊர்வலமும், மாலை 3½மணிக்கு இசைப் போட்டியும் நடைபெற்றன. பல மாவட்டங்களிலிருந்தும் வந்த 30 மாணவர்களுக்குமேல் போட்டியில் கலந்துகொண்டனர். முன்னணி முதற் பரிசு ரூ, 20 தில்லை ஜி. அம்புயவல்லி, 2வது பரிசு ரூ.10 அண்ணாமலை நகர் சி.என். சிவராசன், ரூ. 10 குடந்தை பா. தமிழரசன், பின்னணி முதற்பரிசு தில்லை வீ. பத்மாவதி ரூ. 10, 2வது பரிசு ரூ. 5 மீனவன்குடி ஆர். பரமசிவம் பெற்றார்கள்.

அண்ணாமலை நகர் கே. எ. மதியழகன் கவிஞரைக் குறித்துச் சொற்பொழிவாற்றினார். புலவர் கா. மு. மாணிக்கம் அவர்கள் நன்றி கூறினார்.

# கழகம் அமைத்தார்கள்

15-2-46ல் பெத்துநாயக்கன்பேட்டை திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்று தோழர் டி. துளசி அவர்களைத் தலைவராகக்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

14-3-46ல் திருத்துறைப்பூண்டி தாலுக்கா கள்ளிக்குடி கிராமத்தில் தோழர் மு. கோவிந்தசாமி அவர்களைத் தலைவராகக்கொண்ட திராவிடர்கழகம் அமைக்கப்பட்டது.

3-3-46ல் அம்மையப்பட்டில் தோழர் மா. பூபால் அவர்களைத் தலைவராகக்கொண்ட திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது.

12-3-46ல் மணக்கால் திராவிடர் கழகத்திற்கு தோழர் ம. சி. கந்தசாமி அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வேறு பல முடிவுகளும் செய்யப்பட்டன.

திருச்சி மலைக்கோட்டை திராவிடர் கழகக் கூட்டம் 17-2-46 காலை தோழர் எல். சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்று 46-ம் ஆண்டுக்கு நிர்வாகஸ்தர் தேர்தல் நடைபெற்று தோழர் சிங்காரவேலு மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

10-3-46ல் வார்க்கால்பட்டில் தோழர் சி. இளவழகன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் காஞ்சி கலியாணம் அவர்களால் வார்க்கால்பட்டுத் தோழர் பழனிசாமி அவர்கள் இல்லத்தில் திராவிடர்கழகம் திறந்துவைக்கப்பட்டது.

11-3-46ல் சென்னை பெரியமெட்டில் சா. து. மு. பழனிசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சென்னை, பெரியமெட் 23வது வட்ட திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது.

10-3-46ல் திருத்தொண்டகல்லூரில் தோழர் சு. பால் பாண்டியன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் இரா. பாலராசு அவர்களைத் தலைவராகக்கொண்ட திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது. எஸ். நடராசன் கழகத்தைத் திறந்துவைத்தார். மாணவத்தோழர்கள் இராமலிங்கம், சிவசங்கு, தங்கப்பழம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

10-3-46ல் சாத்தூரில் தோழர் சு. தியாகராசன் தலைமையில் திராவிட இளைஞர் கழகம் நிறுவப்பட்டது.

10-3-46ல் சாத்தூரில் தோழர் எஸ். எஸ். பழனிசாமி தலைமையில் சாத்தூர் தாலுக்கா திராவிடர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்று கடம்பன்குளம் தோழர் பி. நாராயணன் அவர்களைத் தலைவராகக்கொண்ட செயற்குழு நிறுவப்பட்டது.

4-2-46ல் வாழ்குடை திராவிடர் கழகத்திற்கு தோழர் வி. எஸ். கிருஷ்ணசாமி அவர்களைத் தலைவராகக்கொண்ட கமிட்டி நிறுவப்பட்டது.

19-3-46ல் காரைக்குடி திராவிடர் கழக இலவசப் படிப்பகத்தில் தோழர் வே மு. பெ. கருப்பையா அவர்கள் தலைமையில் கூடிய கறுப்புச்சட்டைப் படை கூட்டத்தில் டாக்டர் எம். பரமசிவம் அவர்கள் படைத்தலைவர் (கேப்டன்)ஆகக் கொண்ட கறுப்புச்சட்டைப் படை அமைக்கப்பட்டது. தோழர்கள் ராம. சுப்பையா, நா. இராமசாமி, வே. சவுந்திரபாண்டியன் ஆகியோர் கறுப்புச் சட்டைப் படையின் அவசியம்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்,

## திராவிட மாணவர் பொது அவை

நீடாமங்கலத்தில் 1946 பிப்ரவரி 23, 24ல் நடந்த திராவிட மாணவர் மாநாட்டில் இவ்வாண்டிற்கு திராவிட மாணவர் பொதுஅவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

சென்னை:- மா. குமாரசாமி, கே. நடராசன், சத்தியேந்திரன்.

செங்கல்பட்டு:-அருணாசலம்.

வடஆர்க்காடு:- வி. பி. டீகாராம், ஜே. எல், ஏ. ராசன்.

தென்ஆர்க்காடு:- இளவழகன், இமயவர்ம்பன், இளம்வழுதி, எஸ். கே. நடராசன், விசுவநாதன், ஞானசுந்தர பாண்டியன், கோவிந்தசாமி

தஞ்சை:-அரங்கண்ணல், சொக்கப்பா, இளஞ்சேரன், இளவழகன், D. வெங்கடாசலம், மு கருணாநிதி.

திருச்சி:-சண்முகம், சாமிநாதன், து. மா. பெரியசாமி, நடராசன்.

சேலம்:- வை. திருநாவுக்கரசு, கே. ஏ. முத்து, எம். கிருஷ்ணசாமி, கே. வெங்கடாசலம், குழந்தைசாமி,

கோயம்புத்தூர்:-ஈ. வி. கே. சம்பத், அப்பாவு, கோவிந்தன், சிவசுப்பிரமணியன்.

மதுரை:- எஸ். குருசாமி, கே. ராஜசேகரன்.

ராமனாதபுரம்:- எஸ். ஆர். பாலசுப்ரமணியம், முருகேசன், சுந்தரவேலு;

புதுக்கோட்டை:- எம். முனிசாமி.

## திராவிட மாணவர் செயல் அவை

தலைவர்:-ஈ. வி. கே. சம்பத்(ஈரோடு)

பொதுக்காரியதரிசி:- இரெ. இளம்வழுதி (அண்ணாமலைநகர்)

கூட்டுக்காரியதரிசி:- மா. குமாரசாமி (சென்னை)

துணைத்தலைவர்:- ஏ. பி. ஜனார்த்தனம் (சென்னை) வை. திருநாவுக்கரசு (சேலம்)

பொக்கிடதார்:சொக்கப்பா(குடந்தை)

குழுவினர்:- வெங்கிடாசலம் (திருவாரூர்) ஞானசுந்திரபாண்டியன் (தஞ்சை) ராமானுசம் (மதுரை) முனிசாமி (புதுக்கோட்டை) குழந்தைசாமி (சேலம்)

---

திட்டக்குடி பஞ்சாயத்துபோர்டு மெம்பராக தோழர் ரெங்கசாமி என்னும் சுயமரியாதைத் தோழர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பம்பாய் தாராவி திராவிடநாடு பகுத்தறிவு நிலைய 2ம் ஆண்டுவிழா 3-2-46ல் தோழர் சவரிதாசன் தலைமையில் நடைபெற்று, தோழர்கள் சுந்தரவேல், அரஸ்டியன், சண்முகவேல் ஆகியவர்கள் பேசினார்கள்.


# தீப்பொறி

தாழ்த்தப்பட்டோர்கள் விடுதலைக்காக எழுதப்பட்டுள்ள ஓர் நூல் 'தீப்பொறி' என்ற பேர்க்கேற்றபடி மக்கள் உள்ளத்திலே ஓர் புதிய உணர்ச்சியையும், பரபரப்பையும் உண்டாக்கும்.

தீண்டாதார்கள் வாழ்வும், வாழ்க்கையை பாழ்படுத்தியதையும், அவைகளை நிவர்த்திக்கும் மார்க்கங்களையும் தெள்ளத்தெளிய எடுத்துரைக்கும் நூல். ஒவ்வொரு பழங்குடி தோழனும், திராவிடத் தோழர்களும் வாசிக்கக் கடமையாகும். படித்தவர்கள் உண்மையாகவே ஓர் புதிய சகாப்தத்தை அடைய முடியும்.

தனிப்பிரதி விலை அணா 6. தபாலில் அனுப்ப 7-அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெறலாம். தமிழகத்தில் பற்பல பாகத்திலும் ஏஜண்ட்கள் தேவை. 100க்கு 25-கமிஷன் தரப்படும். வேண்டுவோர்:

ஷெடியூல்டு வகுப்பு நூல் பதிப்பு வெளியீடு நிலையம்,
இராசீபுரம் P. O. (சேலம் ஜில்லா) தேன் இந்தியா.


ரோஜா முத்தையா

## நடக்க இருப்பவை

●31-3-46 ஞாயிறன்று கடலூர் O. T. திராவிடர் கழக ஆண்டு விழா பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். திறப்பாளர்: நா. மு. மாணிக்கம், கொடிஏற்றல்: இராமாமிர்தத்தம்மாள், திராவிடநாடுபடத் திறப்பு: சென்னை C.D.T. அரசு, பன்னீர் செல்வம் படத்திறப்பு: காஞ்சி கலியாணசுந்தரம், கறுப்புச்சட்டைப்படையும் அதன் அவசியமும்: A. V. P. ஆசைத்தம்பி. பெண்கள் கல்வி: மணி அம்மையார். மற்றும் தோழர்கள் ஆ. திராவிடமணி, இளவழகன், வீரமணி முதலியோர் கலந்துகொள்வார்கள்.

●23-3-46ல் சேலம் ஆத்தூர் மெஹர் தியேட்டரில் தோழர் எத்தாப்பூர் ஒய். எஸ். அருணாசலம் அவர்கள் தலைமையில் நாகை திராவிட நாடக சபாவின் ஆண்டுவிழா நடைபெறும். தோழர்கள் அனைவரும் வந்து சிறப்பிக்கவேண்டுமென தோழர் ஆர். வி. கோபாலன் கோருகிறார்.

●6-4-46ல் திருவண்ணாமலை கம்மவார் மடம் மேல்மாடியிலுள்ள சொற்பயிற்சிக்கூட்டத்தில் திருவண்ணாமலை, செங்கம், போளூர் ஆகிய தாலுக்காக்களின் திராவிடர் கழக சர்க்கிள் கமிட்டி கூட்டம் நடைபெறும். தோழர்கள் அனைவரும் வருமாறு செயலாளர் ஆ. மு. பாலகிருஷ்ணன் கோருகிறார்.

●31-3-46ல் மேலசண்முகபுரம் திராவிட கழகம் மூன்றாவது ஆண்டுவிழா நடைபெறும் எனத் தோழர் பி. எஸ். சண்முகம் அவர்கள் தெரிவிக்கிறார்.

●25-3-46 திங்கள் மாலை 6மணிக்கு காரைக்குடி திராவிடர் கழக இலவசப் படிப்பகத்தில் திருப்பத்தூர் தாலுக்கா திராவிடர் கழக அமைப்புக்கூட்டம் நடைபெறும், தாலுக்காவிலுள்ள திராவிட கழக முக்கியஸ்தர்கள் யாவரும் வரவேண்டுமென அமைப்பாளர் தோழர் இராமசுப்பையா கோருகிறார்.

●31-3-46 ஞாயிறன்று மாலை 6மணிக்கு வேலூர் கோட்டை வெளியில் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் அன்பழகன் எம். ஏ., "திராவிடர் நிலை" என்பதுபற்றி பேசுவார்.

●31-3-46ல் வெளிப்பாளையம் மணி பகுத்தறிவுக்கழக 2-வது ஆண்டுவிழா விக்டோரியா பார்க்கில் (பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் [illegible] செல்ல வேண்டிய திருப்பதால்) தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் நடைபெறும். நெடுஞ்செழியன், புலவர் மாணிக்கம், சம்பத், சீனிவாசன், புலவர் குழந்தையா ஆகியவர்கள் பேசுவார்கள்.

●30-3-46ல் மாயவரம் திராவிடர் கழக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும், தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ., அவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

●24-3-46 காலை 9மணிக்கு திருச்செங்கோடு என். கே. பி. வேல் அவர்களின் செல்வம் டாக்கிரெட் ஆயில் ஸ்டோரை திருச்செங்கோடு தோழர் ஆர். கே. ஆறுமுகம் அவர்கள் மாளிகையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்துவைப்பார்கள். தோழர்கள் ஆ திராவிடமணி, எ. சித்தையன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

●7-4-46ல் தென்னாற்காடு க. ச. படை முதல் மாநாடு குறிஞ்சிப்பாடியில் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும். விவரம் அடுத்த இதழில் வரும்.

## கறுப்புச்சட்டைப்படை மாகாண மாநாடு

மதுரை: மார்ச் 20ல் ச. பழனிவேல் தலைமையில் நடைபெற்ற க. ச. படை மாகாண மாநாட்டை ஏப்ரல் கடைசியில் நடத்துவதென்றும், 24-3-46ல் வரவேற்புக் கமிட்டிக்கூட்டம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## திருச்சி மாவட்ட 17வது திராவிடர் கழக மாநாடு

3-3-46 ஞாயிறன்று திருச்சி சோழங்கநல்லூரில் பழயகோட்டை இளைய குமார பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

காலையில் திருச்சி மணிக்கூண்டிலிருந்து கறுப்புச்சட்டைப்படை ஊர்வலமும், சோமாசம் பேட்டையிலிருந்து தலைவர்கள் ஊர்வலமும் நடைபெற்றன.

தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ., திராவிடர் கழகக்கொடி ஏற்றுவித்தார். வரவேற்புக் கழகத் தலைவர் சோழங்கநல்லூர் தோழர் எ. சின்னதுரை அம்பலகாரர் அவைவரையம் வரவேற்றார். தலைவரை முன் மொழிந்து பெரியார், தோழர்கள் தி. பொ. வேதாசலம், டி. கே. சீனுவாசன் ஆகியோர் பேசினார்கள்.

தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தலைமை வகித்து தமது தலைமையுரையை நிகழ்த்தினார்கள். தோழர்கள் பாலகுரு, மணி அம்மையார், ஜே. பி. கிருஷ்ணன்; ஈ. வெ. கி. சம்பத், ஆகியோர் பேசியபின் பெரியார் அவர்கள் திராவிட சமுதாயத்தின் இழிநிலையை விளக்கி அரிய சொற்பொழிவாற்றினார்கள். பிற்பகலில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தளபதி அண்ணாதுரை அவர்களும், மற்றும் பல தோழர்களும் தீர்மானங்களை முன் மொழிந்தும் வழி மொழிந்தும் பேசினார்கள். தோழர் ஆ. திராவிடமணி நன்றிகூறினார்.

கடல் கடந்த நாடுகளில் சேவை புரியும் பல்லாயிரக் கணக்கான இந்திய, பிரிட்டிஷ் துருப்புகள் இன்னும் அதிகமான சௌகரியங்களை அடைய ஆசைப்படுகின்றன.

★

எனவே

நமது துருப்புகளை எவ்வளவு தூரம் சந்தோஷமாகவும், சௌகரியமாகவும் வைத்திருக்க முடியுமோ அதற்கு மேலும் பணம் தேவை என்று

**மே. த. கவர்னரின்**

சைன்யநிதி, நிவாரணநிதி மிக உருக்கமாக வேண்டுகோள் விடுகிறது

தயவுசெய்து உங்களது பணத்தை "சைன்ய நிதி, நிவாரண நிதி" என்று குறிப்பிட்டு

ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள், கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா முதல் லைன் பீச், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பிக் கொடுக்கவும்.

குடி அரசு

1946-ஆம் மார்ச்மீ 23-உ

# தேர்தல் நடந்துவிட்டது

## "வெற்றி" காங்கரசுக்கே

சென்னை சட்டசபை தேர்தல் நடந்துவிட்டது. காங்கரஸ் "ஜெயக்கொடி" நாட்டிவிட்டது. அதுவும் "பூர்ண வெற்றி"க்கொடி, என காந்தி பக்தர்களும், வடநாட்டு முதலாளி பக்தர்களான ஆரியர்களும், ஆரிய பக்தர்களும் கும்மாளம் அடிக்கிறார்கள். முஸ்லிம் லீக் தவிர சட்டசபையில் காங்கரசுக்கு இன்று உண்மையான எதிர்ப்பு இல்லை என்றே சொல்லலாம். அதுவும் தன் காரியத்தைப் பொருத்தவரை எதிர்ப்பே தவிர மற்றவர்களைப்பற்றி கவலையற்ற எதிர்ப்பாகும். எப்படியெனில் முஸ்லிம் லீக்கும் காங்கரசைப் போலவே வெளிநாட்டு பத்துவாலை எதிர்பார்க்கும் ஸ்தாபனமாகும்.

ஆதலால் இந்த மாகாணத்தில் காங்கரசுக்கு இந்நாட்டு மக்கள் எதிர்ப்பு இல்லை என்று சொல்லலாம்.

நம் ஸ்தாபனத்தை எடுத்துக் கொண்டால் நமக்கு தோல்வி இல்லையென்றாலும் நமக்கு என்று சட்டசபையில் காங்கரஸ் கொடுமையை எதிர்க்க ஆளில்லை. நாம் இதற்குஆக சட்டசபையை நாடவில்லை ஆதலால் இதுவிஷயத்தில் வெற்றியும் இல்லை, தோல்வியும் இல்லை, கவலையும் இல்லை. எனவே நம் எதிரிகளின் வெற்றி நமக்கு ஒன்றும் இழிவையோ ஏமாற்றத்தையோ தருவதாக ஆகிவிடவும் இல்லை. இன்றைய நிலையில் நமக்கு சட்டசபையில் இடம் இல்லை, என்றாலும் நமக்கு அங்கு வேலையும் இல்லை என்ற பூர்ணமான தெளிவான முடிவுடனேயே நாம் அதில் கவனம் செலுத்தவில்லை. நாம் எதிர்பார்த்தபடிதான் காங்கரஸ் ஏகபோக வெற்றிபெற்று சர்வாதிகார பீடத்தில் அமர்ந்து ஆணவ அஹம்பாவ ஆட்சி நடத்தப்போகிறது. திராவிட கழகம் ஒன்றே இந்த சர்வாதிகார ஆணவ அஹம்பாவ ஆட்சிக்கு அறிவுருத்தக் கூடியதான பொருப்பில் இருக்கிறது. இந்தத் திராவிட கழகம் இன்று உள்ள நிலை தன்னைத் தானே நம்பி தன் காலிலேயே நின்று இரண்டில் ஒன்று என்னும் இறுதிப்போராட்டத்திற்கு தோள் தட்ட வேண்டியதாகும். இதற்கு படை இளைஞர்களும் மாணவர்களும்தான். இதற்கு போர்சாதனம் திராவிடரின் தன்மானமும் இனி இந்த இழிவைப் பொருக்கோம் என்கின்ற துடிதுடிப்பும் இதற்குஆக என்ன வேண்டுமானாலும் செய்து, எது வந்தாலும் அனுபவிக்கத் தயாராய் இருக்கிறோம் என்ற உண்மைத் துணிவும் தான். ஆகவே நாம் (திராவிட கழகத்தார்) போருக்குத் தயாராக வேண்டும். உண்மையின் நாணயமாய்த் தயாராகவேண்டும்.

அதற்காக திருச்சி மாநாடு தீர்மானித்தபடி ஒரு லட்சம் அங்கத்தினர், 50000 ரூபாய், இரண்டாயிரத்திற்குகுறையாத கறுப்புச்சட்டைப்படை வீரர் ஆகிய இவை போருக்கு முன் பூரணமாகி ஆகவேண்டும். இவை போதுமா? போதாதா? என்பது முடிவு செய்யப்பட்டு விடவில்லை. ஆனால் இவை பூரணமாகப் போவதில் இருந்துதான் திராவிட கழகத்தின் வலிவையும் அதற்கு மக்களிடத்தில் உள்ள ஆர்வத்தையும் ஆதரவையும் பரீட்சை (Test) பார்த்து பிறகு நம்லட்சியத்திற்குத் தொண்டாற்றப் பிரவேசிக்கப் போர் வேண்டி இருக்கிறது. திராவிட கழகத்திற்கு ஆந்திர, கேரள, கர்னாடக நாட்டாரின் ஆதரவு போதிய அளவு இருக்கிறது என்று சொல்லமுடியாது. இது முதலிலேயே தெரிந்ததுதான். அங்கு நமது பிரசாரம் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தோம். ஆனால் இதுவரை செல்ல சரியானபடி முயற்சிக்கவில்லை. காரணம் வசதி இல்லாததேயாகும். ஆனால் அங்கெல்லாம் நம்மிடம் நமது கொள்கைஇடம் அனுதாபம் கொண்ட மக்கள் நிரம்ப இருக்கிறார்கள். இன்று நமக்கு போதிய பத்திரிக்கைகள் இல்லை. ஆனால் அதற்கேற்ற முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. தமிழ் தினசரி மாத்திரமல்லாமல் மற்ற மொழிகளிலும் பத்திரிக்கைகள் வெளியாக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. போதிய பிரசாரகர்களும் இல்லை. ஏனெனில் இப்போது பிரசாரத்திற்கு அதிகம்போர்கள் தேவை இருக்கின்றனர். வெளியிடங்களில் இருந்து பிரசாரதேவைகள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன, அழைப்புகள் அதிகமாகின்றன, நாட்டில் அடிக்கடி கூட்டங்கள், நிகழ்ச்சிகள், மாநாடுகள், விழாக்கள் நடந்தவண்ணமிருக்கின்றன. நம்மாணவர்கள் பிரசாரத்தின் நடுபட்டதிலிருந்தும், பட்டம், பதவி, தேர்தல், நியமனம் ஆகியவைகளின் வேட்கையில் இருந்து நம் கழகம் விலகியபின்பும் பொதுமக்களின் நல்லெண்ணத்தையும் அனுதாபத்தையும் நம் கழகம் பெற்று இருக்கிறது என்பதை இது காட்டுகிறது. இதை சரியானபடி பயன்படுத்தி வெற்றி கொள்ள வேண்டியது நமது அறிவுடமையாகும். பிரசாரகர் குறை நீக்க ஏப்ரல் மாதத்தில் பிரசார (விளக்க ஸ்தாபனம்) பள்ளி துவக்கப்படப்போகிறது நாணயமும் தகுதியும் உண்மையான உழைப்பில் வேட்கையும் சுறுசுறுப்பும்கொண்ட மாணவர் இளைஞர் இதை பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பது நமது விருப்பம்.

எனவே இன்றைய காங்கரசின் போலி வெற்றிபற்றி யாரும் கவலைப்படாமல் இதன் பயனாய் நமக்கு உண்மையானதும் பயன்படும்படியானதும் அவசியம் வெற்றி தரும்படியானதுமான உழைப்புக்கு நல்லதொரு வாய்ப்பு நம் திராவிடகழகத்திற்கு கிடைத்ததென்று தோள்தட்டி தொடைதட்ட வேண்டுகிறோம்.

---

## தோழர் அண்ணாதுரை

தோழர் அண்ணாதுரை அவர்கள் உடல்நலம் கெட்டிருப்பதுகருதியும், தனது பத்திரிகை நலம் கருதியும் சில புத்தகங்கள் எழுதவேண்டும் என்கின்ற அவாவினாலும் ஒரு வருடகாலத்திற்கு பிரசாரத்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

திற்கு வெளியில் செல்லமுடியாம லிருப்பதாகக்கூறி ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்.

இந்தச்சேதி பத்திரிகையில் வந்திருப்பதல்லாமல் சென்னை மாநாட்டில் நேரில் தெரிவித்து அநுமதிக்கும்படி மக்களை வேண்டிக்கொண்டார்.

அவருக்கு உடல்நலம் போதியதாக இல்லை என்பது உண்மை. இந்த நிலையில் மக்கள் அவருக்கு அதிகமாக தொல்லை கொடுப்பது அவரால் ஏற்கமுடியாததேயாகும். ஆதலால் முக்கியமான, மாநாடுகள் தவிர மற்ற சாதாரண கூட்டங்கள் முதலியவைகள் பொறுத்த வரையில் அவருக்குத் தொந்திரவு கொடுக்காமல் இருக்கவேண்டுகிறோம். ஈரோடு பிரசாரப்பள்ளிக்கு அனேகமாய் வந்து மாணவர்களுக்கு அறிவுரை நிகழ்த்துவார். தோழர் டி.பி. வேதாசலம், நெடுஞ்செழியன், சித்தையன் முதலியவர்களும் வரக்கூடும். ஆதலால் வசதி உள்ளவர்கள் வந்து பயிற்சிபெற வேண்டும்.

பெரியாரைப் பொருத்தவரையிலும் உடல்நலக்கேடு காரணமில்லாவிட்டாலும் விடுதலைப் பத்திரிகை காரணமாய் அவர் சென்னையில் 2, 3 மாதங்களுக்காவது நிலையாய் இருக்க வேண்டி நேரிடுமாதலால் தொடர்ந்தோ அடிக்கடியோ முன்போல வெளியில் வரமுடியாது. ஆதலால் இனி ஆங்காங்கு பிரசாரகர்கள் ஏற்படவேண்டியது அவசியமாகும்.

---

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. இம்மாதம் இறுதி 29ந்தேதி ஈரோட்டில் இருந்து புறப்பட்டு திருச்சி மாயவரம் சென்று 31ந்தேதி கடலூர் முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு ஏப்ரல் முதல்வாரம் சென்னை செல்வார்.

---

24-2-46ல் சேலம் அரிசிபாளையம் திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டம் தோழர் வி. சித்தையன் தலைமையில் நடைபெற்று, சேலம் முனிசிபல் இலவச வாசகசாலையில் திராவிடரியக்கப் பத்திரிகைகள் போடும்படி முனிசிபாலிட்டியாரைக் கேட்பதெனவும் வேறு பல முடிவுகளும் செய்யப்பட்டன.

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 23-3-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 36,901

இம்மாதம் 23உ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல் வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப் பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. தஞ்சை | 6332 | 8. வடஆற்காடு | 2059 |
| 2. சேலம் | 6180 | 9. சென்னை | 1870 |
| 3. கோவை | 6072 | 10. மதுரை | 1556 |
| 4. திருச்சி | 4418 | 11. செங்கல்பட்டு | 950 |
| 5. இராமநாதபுரம் | 2420 | 12. திருவிதாங்கூர் | 216 |
| 6. திருநெல்வேலி | 2370 | 13. பெங்களூர் | 169 |
| 7. தென் ஆற்காடு | 2194 | 14. புதுக்கோட்டை | 95 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு.

## இவைகளைச் செய்தீர்களா?

☆

1. திராவிட கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கின்றீர்களா?
2. கழகம் அமைத்தீர்களா?
3. கறுப்புச்சட்டைப்படையில் சேர்ந்தீர்களா?
4. கறுப்புச்சட்டை தைத்துக் கொண்டீர்களா?
5. தகுதியும் வசதியும் உள்ளவர்கள் பிரசாரத்திற்கு புறப்பட ஆயத்தமானீர்களா?
6. செலவு ஏற்றுக்கொள்ளத் தக்க தன்மையோடு வசதிப்பட்டவர்கள் பிரசாரப் பள்ளிக்கு வர வேண்டுகோள் அனுப்பிவிட்டீர்களா?
7. மாணவர்கள் பிரசாரத்திற்கு வரும்பொழுது கூட்டங்கள் நடத்த ஆங்காங்கு ஏற்பாடு செய்துவிட்டீர்களா?

செயலாளர்:
மத்திய திராவிடர் கழகம், ஈரோடு.

### பெயர் சூட்டல்

இராசிபுரம் ந. சாமிநாதன் அவர்கள் வாழ்க்கைத்துணைவி இராசம்மாளுக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு தாமரைக் கண்ணி என்று 3-3-46ல் தோழர் இரா. எழில்நிலவர் பெயர் சூட்டினார். குடி அரசு வளர்ச்சிக்கு ரூபா ஒன்று அளிக்கப்பட்டது.

* *

17-2-46ல் திருச்சி தோழர் தி. பொ. வேதாசலம் அவர்களால் திருச்சி, ஜெனரல் மார்க்கட் செல்வம் மளிகை உரிமையாளர்கள் தோழர்கள் முத்துசாமி, இரங்கையா இவர்களின் குழந்தைகளுக்கு முறையே நற்குணம், கபிலன் எனப் பெயர் சூட்டப்பட்டது. இனிய தேநீர் விருந்து நடைபெற்று தோழர் டி. கே. சீனுவாசன் சொற்பொழிவாற்றினார். தோழர் பராங்குசம் நன்றி கூறினார்.

### பிறப்பு

நாங்குனேரி தாலுக்கா அனுமார் புதுக்குளம் தன்மதிப்பியக்கத்தோழர் எஸ். எம். டி. சுப்பையா அவர்களின் வாழ்க்கைத் துணைவி கனகம்மாளுக்கு 27-2-46ல் பெண் மகவு பிறந்து தியாகபதி எனப் பெயரிடப்பட்டது. இது குறித்து குடி அரசு வளர்ச்சிக்கு ரூபா ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது.

* *

நாசரத்தோழர் பி. எஸ். ஆர். சயபால் தமது 20வது பிறந்தநாளை முன்னிட்டு குடி அரசு வளர்ச்சிக்கு ரூபா ஒன்று நன்கொடை அளித்தார்.

* *

தூத்துக்குடி தோழர் பி. பால் அவர்களின் வாழ்க்கைத்துணைவி பெரியநாச்சியம்மாளுக்கு 12-2-46ல் ஆண் குழந்தை பிறந்தது. குடி அரசுக்கு ரூபா ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது.

---

10-3-46ல் சென்னை அமைந்தகரை திராவிடர் கழக முதலாண்டு விழா பஞ்சாயத்து போர்டு பள்ளியில் தோழர் C. D. T. அரசு அவர்கள் தலைமையில் நடைபெற்று பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் தோழர் என். வி. நடராசன், தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோரும் சொற்பொழிவாற்றினார்கள். திராவிடர் கல்வி வளர்ச்சிக்கழகம் என்ற பெயரை மாற்றி திராவிடர் கழகமென அமைக்கப்பட்டது.

## ஆங்காங்கே!

தஞ்சை நகரில் திராவிடர் கழகத்திற் சேருவோர் கீழவாசல் மளிகை பி. செம்புலிங்கம், அய்யங்கடைத்தெரு காசுக்கடை என். கோவிந்தசாமி ஆகிய இடங்களில் சேரலாம்.

o o

கும்பகோணம் தாலுக்காவில் கறுப்புச் சட்டைப்படையில் சேருவோர் எஸ்.எஸ். வாசன், திராவிடர் கழகம், தாராசுரம் என்ற முகவரியில் சேரலாம்.

o o

சாத்தூர்தாலுக்கா தோழர்கள் உடனே எல்லா கிராமங்களிலும் கழகங்கள் அமைத்து உதவுவதோடு எல்லா கழகங்களின் விவரங்களையும் தெரியப்படுத்தி தாலுக்கா கழகத்தோடு இணைத்துக் கொள்ள வேண்டுமென்றும், ஒவ்வொரு கிராமத்திலும், கறுப்புச்சட்டைப்படை அமைக்கவேண்டுமென்றும், 25-3-46 விருந்து விருதையிலிருந்து புறப்படும், கிராமப் பிரச்சாரக்குழுவில் கலந்து கொள்வோர் தமது பெயரைத் தெரிவிக்கும்படியும் சாத்தூர் தாலுக்கா திராவிடர் கழகச் செயலாளர் விருதுநகர் ந. இராமசாமி அவர்கள் கோருகிறார்;

## நெல்லை மாவட்டத் தோழர்களுக்கு

திருநெல்வேலி ஜில்லா திராவிடர் கழக அலுவல்களைக் கவனித்துவந்த தோழர் சே. வி. சே. சாமி அவர்கள் தற்பொழுது குடி அரசு ஆபீசில் இருந்து வருவதால் அவரிடம் கழக இரசீது புத்தகங்கள் பெற்ற தோழர்கள் அன்புகூர்ந்து மெம்பர்களைச் சேர்த்து விரைவில் இரசீது புத்தகங்களையும், தொகையையும் ஈரோடு குடி அரசு ஆபீசுக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறார்.

## இராமநாதபுரம் மாவட்டத் தோழர்களுக்கு

31-3-46 ஞாயிறு காலை 11 மணிக்கு சிவகங்கை திராவிடர் கழகக் கட்டிடத்தில் மாவட்ட கழகம் அமைக்கவும், நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கவும் கூட்டம் நடைபெறும். தாலுக்கா, நகர, கிராம கழகப் பிரதிநிதிகளும், பிற முக்கியஸ்தர்களும் வந்து கலந்துகொள்ளவேண்டுமென இராமநாதபுரம் மாவட்ட அமைப்பாளர் தோழர் இராமசுப்பையா கோருகிறார்.

---

17-2-46ல் பெரிய காஞ்சிபுரம் திராவிடர் கழகச்சார்பில் அக்ராவரம் என்னும் கிராமத்தில் தோழர் வி. கண்ணப்பனார் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பல தோழர்கள் பேசினார்கள். வாசகசாலை திறவ அவ்வூர்த் தோழர்கள் முடிவு செய்தனர்.

## சேலம் கல்லூரி உணவு விடுதி ஆண்டுவிழா

சேலம் கல்லூரி உணவு விடுதி ஆண்டு விழா, 21-2-46 மாலை கல்லூரிக் கட்டிடத்தில் இராவ்சாகிப் பி. இரத்தினசாமி சேலம் முனிசிபல் சேர்மன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. செயலாளர் தோழர் எம். கே. மணிமுத்து ஆண்டு அறிக்கை வாசித்தார்.

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் "மாணவர்கள் கல்வியை உயர்ந்த நோக்குடன் கற்கவேண்டும். வெறும் பதவிக்காகக் கற்பது கூடாது. மாணவர்கள் மனித சமுதாயத்தை முன்னேற்றக்கடமைப்பட்டவர்கள். உண்ணும் இடங்களிலே சாதியை அடிப்படையாகக் கொண்ட பிரிவு கூடாது" என்று விளக்கமாகப் பேசினார்கள்.

தலைவர் முடிவுரையில் உணவுவிடுதிக்காகத் தனிக்கட்டிடம் கட்டித் தருவதாக உறுதி கூறினார்.

பின்னர் விளையாட்டிலும், பேச்சு, இசைப்போட்டியிலும் வெற்றிபெற்றவர்கட்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

தோழர் கோதண்டராமன் அவர்களின் நன்றிகூறலுக்குப்பின் கூட்டம் முடிவுற்றது. தலைவர், பெரியார் ஆகியவர்களோடு ஒரு உருவப்படம் எடுக்கப்பட்டது. அன்றிரவு உணவு விடுதி மாணவர்களால் அளிக்கப்பட்ட விருந்தில் பல பெரியோர்கள் கலந்துகொண்டனர்.

## மாநாடுகளின் வரவுசெலவு

9-12-45ல் நடைபெற்ற திருவத்திபுரம் திராவிடர் கழக மாநாட்டு, வரவு ரூ. 737-8-0 செலவு ரூ. 747-14-3. அதிகச்செலவு ரூ. 10-6-3 தோழர்களால் ஈடு செய்யப்பட்டது.

மா. நா. இராசமாணிக்கம்,
பொருள் காப்பாளர்

o o

6-1-46ல் திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் மாநாடு, க. ச. படை மாநாடு இவைகளின் வரவு ரூ. 516-6-0, செலவு ரூ. 475-12-0, மீதம் ரூ. 40-10-0.

செயலாளர்கள்:- அரங்கண்ணல்,
வி. எஸ். பி. யாகூப்.

o o

26, 27-1-46ல் திருநெல்வேலியில் நடைபெற்ற நெல்லை மாவட்ட திராவிடர் கழக மூன்றாவது மாநாட்டு வரவு ரூ. 2127-4-0, செலவு ரூ. 2647-5-6, அதிகச்செலவு ரூ, 520-1-6, இதைத் தோழர்கள் ஈடுசெய்து தர வேண்டுமெனவும், மாநாட்டு டிக்கட் விற்பனையாளர்கள் வசூல் தொகையையும், மிகுதி டிக்கட்டுகளையும் அனுப்பிவைக்க வேண்டுமெனவும் தோழர் கே. எம். பிரமநாயகம் கோருகிறார்.

o o

24-2-46ல் நடைபெற்ற இராசிபுரம் திராவிட மாணவர் கழகத் திறப்புவிழா வரவு ரூ 188-2-0, செலவு ரூ. 118-2-0 மீதம் இருப்பு ரூ. 70-0-0 கழக நிதியாக உள்ளது என்று மேற்படி கழகத்தார் அறிவிக்கின்றனர்.

## நன்றி அறிவிப்பு

சென்ற 17-3-46 அன்று சென்னையில் நடைபெற்ற 2-வது சர்க்கிள் திராவிட மாநாடும், கறுப்புச்சட்டைப்படை அணிவகுப்பும், கடற்கரைப் பொதுக் கூட்டமும், வெற்றிகரமாக நடைபெற உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுவதோடு மாநாட்டு வரவுசெலவு கணக்குகள் வருகிற 26-3-46 செவ்வாய்க்கிழமை மாலை 6மணிக்கு பார்க் டவுன், பொம்மு செட்டித்தெரு நெ. 11 வீட்டில் நடைபெறுமென்றும் 2வது சர்க்கிள் நிர்வாக உறுப்பினர் அனைவரும் அவ்வமயம் வருமாறும் செயலாளர் கே. கோவிந்தசாமி கேட்டுக்கொள்கிறார்.

## திருவையாற்றில் திராவிடர் கூட்டம்

25-2-46 மாலை 4-30 மணிக்கு ஊர்வலம் நடைபெற்று 6-மணிக்கு தோழர் பி. வேணுகோபால் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் ஆற்றில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பதினாயிரக்கணக்கான மக்கள் பெரியாரின் சொற்பொழிவைக் கேட்க ஆவலுடன் வந்து குழுமியிருந்தனர். பெரியார் சுமார் 3மணி நேரம் "திராவிட சமுதாயம்" என்பது குறித்து அரிய சொற்பொழிவாற்றினார். தோழர்கள் எஸ்.கே. சாமி, ஏ. பி. சனார்த்தனம், ஆ. திராவிடமணி ஆகியோர் பேசியபின் இரவு 10 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது. கூட்டத்தை வெற்றிகரமாக நடத்த தோழர்கள் இராமச்சந்திரன், நாராயணசாமி ஆகியோர் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள்.

திருவையாறு மருத்துவகுல சங்கத் தலைவர் தோழர் இராசப்பா பெரியாருக்கு 113 காலணாகொண்ட பணமுடிப்பு அளித்தார்.

o o

25-2-46ல் கண்டியூர் ஆதிதிராவிடத் தெருவில் தோழர் வேதமுத்து அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பன்னீர்செல்வம் வாசகசாலையை பெரியார் திறந்து வைத்தார்கள். 101 காலணாகொண்ட பணமுடிப்பு பெரியாருக்கு அளிக்கப்பட்டது.

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

சென்னைத்தோழர் என். வி. நடராசன் சகோதரர் தோழர் என். வி. கதிர்வேலுக்கும் தையூர் கிருஷ்ணசாமி அவர்களின் மகள் தனலட்சுமிக்கும் 18-2-46 காலை சென்னை பெத்துநாயக்கன் பேட்டையில் தோழர் மயிலை சிவமுத்துக் குமாரசாமி முதலியார் தலைமையில் நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்தத்தில் தோழர்கள் சத்தியவாணிமுத்து, புலவர் பு. செல்வராஜ், வி. எஸ். தேவசுந்தரம், டி. வி. முருகேசம் ஆகியோர் பேசினர். குடி அரசு, திராவிடநாட்டுக்கு முறையே 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

நாகை தன்மதிப்பியக்க செயலாளர் தோழர் பி. கே. பக்கிரிசாமிக்கும் இந்திராணி அம்மைக்கும் 7-2-46 காலை தோழர் டி. சே. விசயராகவலு பி. ஏ., பி. எல்., தலைமையில் சீர்திருத்த மணம் நடைபெற்று தோழர் டி. பி. ஆறுமுகம், எஸ். பி. கிருஷ்ணன், தீனதயாளு ஆகியோர் பேசினார்கள். பல பரிசுகள் வழங்கப்பட்டன. குடி அரசுக்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

தாத்தையங்கார் பேட்டை தோழர் எம். எஸ். என். ராசன் தோழியர் சகுந்தலா திருமணம் நெல்லிக்குப்பத்தில் விமரிசையாக நடந்ததின் நினைவாக குடி அரசு, தொழிலாளர் மித்திரன், தா. பேட்டை திராவிடர் கழகம் ஆகியவற்றிற்கு முறையே 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

திருச்சியில் தோழர்கள் சதுர்புஜம்—தர்க்கபாய் புரோகிதமற்ற திருமணம் 6-2-46ல் நடைபெற்றது. தோழர் டி. பி. வேதாசலம் சொற்பொழிவாற்றினார். குடி அரசுக்கு 1 ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

மகுடஞ்சாவடியில் 8-2-46ல் தோழர்கள் சின்னம்மாள்—ரங்கநாதன் சீர்திருத்த மணத்தையொட்டி ஈரோடு மருத்துவர் சங்கத்திற்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

தஞ்சையில் தோழர்கள் கிருஷ்ணசாமி—சாவித்திரி அம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் 7-2-46ல் நடைபெற்றது. தோழர் பெரியசாமிப் புலவர் தலைமை வகித்தார். தோழர் டி. எஸ். சுப்பையாவின் மகள் மங்கையர்க்கரசி காதணிவிழாவும் நடைபெற்றது.

o o

கும்பகோணத்தில் 11-2-46ல் தோழர்கள் முருகையன்—மீனாட்சி திருமணம் தோழர் எஸ். எஸ். கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்று அதன் நினைவாக சௌந்திரபாண்டியன் இலவச வாசகசாலைக்கு 2 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

ஆலத்தம்பாடியில் 6-2-46ல் தோழர்கள் குஞ்சிதபாதம்—செல்வமணி அம்மையார் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றதின் நினைவாக குடி அரசு, திராவிடநாட்டுக்கு முறையே 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது. பாண்டியன் வாழ்த்துப்பா அளித்தார்.

o o

வாழ்குடையில் 11-12-45ல் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் தோழர்கள் வி. எஸ். கிருஷ்ணசாமி—சாவியம்மை, வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. பெரியார் சுமார் 3மணி நேரம்பேசியபின்னர் தோழர்கள் கே. கே. சுப்ரமணியம், பாலசுப்ரமணியம், அம்பலத்தாடி ஆகியோர் பேசினார்கள்.

o o

புதுக்கோட்டையில் 7-2-46ல் தோழர் டி. என். கோவிந்தராசலு பி.ஏ.,பி.எல்., தலைமையில் தோழர்கள் கோ. தர்மராசன், செயமணி தமிழ்த்திருமணத்தை தோழர் புலவர் ரத்தினம் நடத்தி வைத்தார். தோழர்கள் டி கே. சீனுவாசன், மீனாட்சி சுந்தர முதலியார் பி. ஏ., எல். டி., சொ. முருகப்பா, மாதவல்லி ஆகியோர் பேசினார்கள்.

o o

பண்ருட்டி புதுப்பேட்டையில் 22-2-46ல் தோழர் மகம்மது அலிபேக் சாயபு அவர்களின் திருமணத்தின் போது புதுப்பேட்டை திராவிடர் கழகத்தார் மன்றல் வாழ்த்திதழ் மணமக்களைப் பாராட்டி வாசித்தளித்தனர். மேற்படி திராவிடர் கழகத்திற்கு ரூபாய் பத்தும், குடி அரசு வளர்ச்சிக்காக ரூபா ஒன்றும் மணமகனால் நன்கொடையாக அளிக்கப்பட்டது.

o o

4-2-46ல் திருப்பத்தூர் தோழர் சி. ஆர். அருணாசலம் அவர்கள் புதல்வி சரோஜினி அவர்கட்கும், கிருஷ்ணகிரி அப்பைய செட்டியார் அவர்கள் புதல்வர் கே. ஏ. திப்பையன் அவர்கட்கும் தோழர் டாக்டர் அண்ணாஜி அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் டாக்டர் ஏ. சண்முகசுந்தரம், முனிசிபல் சேர்மன் வி எஸ். வீரபத்திரன் ஆகியோர் சீர்திருத்தம் பற்றி சொற்பொழிவாற்றினர். குடி அரசு வளர்ச்சிக்காக ரூபா ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

11-2-46ல் திருப்பத்தூரில் தோழர் அ. க. கிருஷ்ணப்பன் அவர்களுக்கும் டி. வி. ரோசு அம்மையாருக்கும் தோழர் வி. எம். இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது பலதோழர்கள் சீர்திருத்தம்பற்றி சொற்பொழிவாற்றினர். குடி அரசு வளர்ச்சி கருதி ரூபா ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது.

7-3-46ல் துறையூர் என். கே. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் தோழர் சுந்திரத்திற்கும், ஜெயலட்சுமிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் மாணிக்கம், பெரியசாமி ஆகியோர் சீர்திருத்தத் திருமணம்பற்றி சொற்பொழிவாற்றினர். குடி அரசு வளர்ச்சி கருதி ரூபா ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது

o o

13-3-46ல் ஈரோட்டுக்கடுத்த பெரிய அக்ரகாரத்தில் தோழர் பி. ஷண்முகவேலாயுதம் அவர்கள் தலைமையில் தோழர்கள் சரவண—ஆர். வி. இராகவன் வாழ்க்கைத்துணை யொப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் டி. வி. நாராயணசாமி, ரஷீத், பி. கே. அப்பா ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினார்கள். மணமகன் தோழர் இராகவன் அவர்கள் அனைவருக்கும் நன்றிகூறி குடி அரசு வளர்ச்சிக்கு ரூபா எட்டு நன்கொடையளித்தார்கள்.

10-3-46ல் விராலிக் காட்டூர் பெருநிலக்கிழார் தோழர் நாச்சிமுத்துக் கவுண்டர் மகள் தோழர் விசாலாட்சிக்கும் சின்னப்புலியூர் மணியம் சிரங்க கவுண்டர் மகன் தோழர் பி. எஸ். சுப்ரமணியம் (ஒரூர் உதவிப்பஞ்சாயத்து ஆபீசர்) அவர்களுக்கும் புரோகிதம் ஒழிந்த திருமணம் நடைபெற்றது.

o o

13-3-46ல் காலை 11மணிக்கு சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்க பாடசாலையில் தோழர் எஸ். பி. லிங்கசாமி—சகுந்தலை மறுமணம் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மாலையில் சுயமரியாதை சங்க கட்டிடத்தில் தோழர் எம். பி. சுப்ரமணியம்—கமலா அவர்களின் கலப்புமணம் பெரியார் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் எம், சித்தையன், ஆர். நடேசன் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர்.

தேவாங்ககுலத்தைச் சேர்ந்தவர் ஆதிதிராவிடவகுப்பு பெண்ணை கலப்புமணம் செய்துகொண்டது பெரிதும் பாராட்டத்தக்கது.

---

14-2-46ல் அத்தூர்க்குடி நகர திராவிடர் கழகத்தின் சார்பில் தோழர் சொ. நீதிமாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

## மறைவு

சினிமா உலகம் ஆசிரியர் தோழர் பி. எஸ். செட்டியாரின் தந்தை அ. பாவாடை செட்டியார் 31-1-46ல் இயற்கையெய்தினார்கள்.

பெங்களூர் தோழர் பி. விஜயலட்சுமியின் தாயார் 25-1-46ல் இயற்கையெய்தினார். நினைவு குறித்து குடி அரசுக்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

வைப்பூர்த் தோழர் ஆர். பச்சையப்பன் தாயாரின் 16-வது ஆண்டு நினைவு நாள் கொண்டாடப்பட்டு குடி அரசு, திராவிட நாட்டிற்கு முறையே ஒரு ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

மதுரை ஜில்லா திராவிடர் கழக நிர்வாக அங்கத்தினர் தோழர் பி. டி. ராமய்யா அவர்களின் தந்தை தேவராச நாடார் 3-3-46ல் இயற்கை எய்தினார்.

கீழக்கோட்டை ஆதிதிராவிட வாலிபர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் எஸ். கே. சிங்காரவேலரின் புதல்வி காந்தமலர் 12-2-46ல் இயற்கை எய்தினார்.

சென்னை ஹைகோர்ட் அட்வகேட் தோழர் டி. நல்லசிவம் அவர்கள் 12-2-46ல் இலஞ்சியில் இயற்கையெய்தினார்.

தர்மபுரி பிரபலஸ்தரும் பர்மாஷெல் ஆயில் ஏஜண்டுமான தோழர் டி. எம். துரைசாமிராயுடு 8-2-46ல் அகால மரணமடைந்தார்.

திருநெல்வேலி திராவிடர் கழக உறுப்பினரும், குடி அரசு ஆரம்பகால் முதல் சந்தாதாரராக இருந்தவருமான தோழர் எ. குமாரசாமி அவர்கள் 9-2-46ல் திடீரென்று மாரடைப்பால் இயற்கை எய்தினார்.

திருச்சி டி. டி. ஆமைச்சுருக்கு காரியதரிசி தோழர் தி. சு. மாணிக்கம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் 28-2-46ல் சேலத்தில் இயற்கை எய்தியது குறித்து கே. ஆர். ராமசாமியின் கிருஷ்ணன் நாடகசபையார் அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

மேலமருத்தாந்த நல்லூர் தோழர் ரு. தங்கசாமியின் தாயார் பிச்சையம்மாள் இயற்கையெய்தியதை முன்னிட்டு 10-2-46ல் நீத்தார் நினைவு நடைபெற்றது. புலவர்கள் நா. மு. மாணிக்கம், நா. குருசிதம்பரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். குடி அரசு வளர்ச்சிக்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

நாமகிரிப்பேட்டை திராவிடர் கழகத் தோழர் எ அய்யாவுசெட்டியார் 13-2-46 தேதி இயற்கை யெய்தியமைக்கு இயக்கத் தோழர்கள் தமது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

பீமநகர் திராவிடர் கழகத் துணைச் செயலாளர் அ. சேதுராசனின் தந்தை எ. அய்யாசாமி 26-2-46ல் இயற்கையெய்தியமைக்கு தோழர்கள் தமது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

ஆச்சாரி ஆட்சிக்குப் பலியான வீரர் இல. நடராசன் தந்தை தோழர் சோ. இலட்சுமணன் அவர்கள் 2-3-46ல் இயற்கை யெய்தினார். 3-3-46ல் மூலகொத்தளம் மயானத்தில் தாலமுத்து நடராசன் நினைவு கட்டிடத்தருகில் பிரேத அடக்கம் செய்யப்பட்டது; தோழர்கள் பத்மநாபன், என். வி. நடராசன் சொற்பொழிவாற்றினர்.

4-3-46 பகல் 12மணிக்கு சோழவந்தான் எஸ். தாளைப்பர் அவர்களின் இளைய குமாரத்தியும் டி. ஆவுடையப்பன் அவர்களின் தங்கையுமான தோழர் பத்மா அவர்கள் ஒரு வாரமாக நோய் வாய்ப்பட்டிருந்து இயற்கையெய்தினார்கள்.

நெல்லை மாவட்ட ஆதிதிராவிட மகாசன சங்கத் தலைவரும், ஜில்லாபோர்டு உறுப்பினரும், பெரதாலத் தொண்டரும் பப்பாய் தாராவியிலுள்ள எஸ். பெரியசாமி, எஸ். சுப்பையா இவர்களின் சிறிய தந்தையுமான தோழர் பி. கே. அழகர்சாமி அவர்கள் 6-3-46ல் மேலப்பாளையம், கணேசபுரத்திலுள்ள அவரில்லத்தில் இயற்கையெய்தியது கேட்டு தோழர்கள் எஸ். பெரியசாமி, எஸ். சுப்பையா இருவரும் தம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## புதிய கறுப்புச்சட்டைப் படங்கள்

தலைவர், தளபதி, சம்பத், நெடுஞ்செழியன், ஜனார்த்தனம் முதலியவர்களின் ஒரிஜினல் புகைப்படம் மனதைக் கவரும் முறையில் வெளிவந்துவிட்டது. சாதாரண உடையிலும் சை தலைவர்கள் படங்கள் கிடைக்கும். எந்த அளவில் வேண்டுமானாலும் கொடுக்கலாம். விற்பனைக்கு வியாபாரிகளுக்கு தக்க லாபம் கொடுக்கப்படும். மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

S. சீராமுலு "போட்டோ"
28, வானாந்துறை வடக்குத் தெரு,
கும்பகோணம்.

## செல்வம் நினைவு நாள்

3-3-46ல் சாத்தூரில் தோழர் தங்கம் தலைமையில் கொண்டாடப்பெற்றது. தோழர் இராசாமணி சொற்பொழிவாற்றினார்.

3-3-46ல் மதுரை சென்னாய் நகரில் தோழர் பிறைமழகன் தலைமையில் கொண்டாடப்பெற்றது. பல தோழர்கள் செல்வம் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

2-3-46ல் கடையநல்லூர் டவுன் திராவிடர் கழகச் சார்பில் தோழர் சே. எம். முகம்மது ஈசூப் பி. எ., அவர்கள் தலைமையில் கொண்டாடப்பெற்றுப் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

3-3-46ல் ஆலத்தம்பாடி திராவிடர் கழகச் சார்பில் தோழர் சுந்தரேசன் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர் பாண்டியன் மற்றும் பலர் செல்வம் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

4-3-46ல் தாத்தையங்கார் பேட்டை திராவிட வாலிபர் கழகத்தின் சார்பில் தோழர் ப. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கொண்டாடப்பெற்று பல தோழர்கள் செல்வம் தொண்டு குறித்துப் பேசினார்கள்.

5-3-46ல் சேலம் அரிசிப்பாளையத் திராவிடர் கழகச் சார்பில் தோழர் எ. சித்தையன் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பல தோழர்கள் "செல்வம் நினைவும் நமது கடமையும்" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினர்.

3-3-46ல் சேலம் பொன்னம்மாப் பேட்டை தியாகராயர் திராவிடர் கழக சார்பில் தோழர் க. பெ. சின்னசாமி தலைமையில் கொண்டாடப்பெற்று தோழர்கள் கந்தசாமி, நரசிம்மன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

3-3-46ல் புதுக்கோட்டை வெங்கடாசலம் நினைவு நூல் நிலையத்தின் சார்பில் தோழர் ப. நாகராசன் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு "செல்வம் தொண்டு" பற்றிப் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

Edited, Printed, and Published by M. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.